# தாராபுரம் (தனி) தொகுதி இடைத்தேர்தல்! கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரம்!



**நாள் : 02.10.2026 - (வெள்ளிக்கிழமை)**

| நேரம் | ஒன்றிய/நகர/பேரூர்க் கழகங்கள் | இடம் |
|---|---|---|
| காலை 10.30 | தாராபுரம் நகரம் | தாராபுரம் அமராவதி சிலையிலிருந்து பொள்ளாச்சி சாலை - பெரியகடை வீதி வழியாக 'ரோடு ஷோ' |
| மாலை 5.00 | தாராபுரம் நகரம் | உடுமலை சாலை மல்லி ரிசார்ட் அருகில் பொதுக்கூட்டம் |

**தேர்தல் பணிக்குழு**

**101 - தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி**



சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பது குறித்து குண்டடம் மேற்கு ஒன்றியக் கழக அலுவலகத்தில் ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழக செயலாளர்களுடன் மேற்கு மண்டல பொறுப்பாளர் கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி கலந்துரையாடினார். உடன் கோவை மாநகர் மாவட்டக் கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன், வால்பாறை சட்டமன்ற உறுப்பினர், நகர கழக செயலாளர் குட்டி (எ) சுதாகர், கோவை வடக்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.பி.சுப்பிரமணியம் உள்ளனர்.

## திருவேற்காட்டில் காய்ச்சலால் ஒரு வயது குழந்தை பலி!

# மக்களின் உயிரைக் காக்க வேண்டிய அரசு இடைத்தேர்தலில் மும்முரம் காட்டிக் கொண்டிருக்கிறது!

## கனிமொழி இராஜாத்தி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவு!

சென்னை, செப். 26-

திருவேற்காட்டில் காய்ச்சலில் ஒரு வயது குழந்தை உயிரிழந்து இருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது மக்களின் உயிரைக் காக்க வேண்டிய அரசு இடைத் தேர்தலில் மும்முரம் காட்டிக் கொண்டிருக்கிறது என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி இராஜாத்தி கருணாநிதி தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவரது ட்விட்டர் பதிவு வருமாறு:

திருவேற்காட்டில் காய்ச்சலால் அவதிப்பட்ட 1 வயது குழந்தை உயிரிழந்திருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது.




தமிழ்நாட்டில்பல்வேறு காய்ச்சல் பாதிப்புகள் குறித்து தொடர்ந்து செய்திகள் வெளியாகிவரும் நிலையில், மக்களின் உயிரைப் பாதுகாக்க வேண்டிய அரசு, தற்போது இடைத்தேர்தலில் மும்முரம் காட்டிக் கொண்டிருக்கிறது.

சுகாதாரத் துறை அமைச்சர் தாராபுரத்தில் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

இன்னும் எத்தனை உயிர்கள் பறிபோன பின், தவெக அரசு இதற்குப் பொறுப்பேற்று, மக்களின் உயிரைக் காப்பாற்ற உரிய நடவடிக்கைகளை எடுக்கப் போகிறது?

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் தமிழ்நேசன் இன்பா ரகு முன்னிலையில் தாராபுரம் நகர பகுதிகளில் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் தாராபுரம் நகரக் கழக செயலாளர் எஸ்.முருகானந்தம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து

# மதுராந்தகத்தில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## மல்லை சி.ஏ.சத்யா அறிவிப்பு!

மதுராந்தகம், செப். 26–

மதுராந்தகம் தொகுதி கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து இன்று (26.9.2026) திராவிட வெற்றிக் கழகம் சார்பில் மதுராந்தகம் தேரடி திடலில் பொதுக் கூட்டம் நடைபெறுகிறது என்று இக்கழகத்தின் தலைவர் மல்லை சி.ஏ.சத்யா அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

இன்று (26/09/2026 சனிக் கிழமை) பிற்பகல் 3 மணியளவில் மதுராந்தகம் தேரடித் திடலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர்

இ.பராந்தாமன் அவர்களை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரிக்கும் பிரச்சார பொதுக்கூட்டம் அவசியம் பங்கேற்று சிறப்பித்திட வேண்டுகின்றேன் .

அன்பின் தோழமைகளே நூற்றாண்டு கடந்த திராவிட இயக்கத்திற்கு இது ஒரு சவாலான காளம் கை விரித்து வந்த கயவர் நம்மிடையே பொய் விரித்து நம் புலன்கள் மறைத்து தமிழுக்கு விலங்கிட்டுத் தமிழகம் பற்றி நமக்குள்ள உரிமை தமக்கென்பார் எனில் வழி வழி வந்த உன் மறத்தனம் எங்கே மொழிப்பற்று எங்கே



வையம் ஆண்ட வண்டமிழ் மரபே உன் கையிருப்பை காட்ட எழுந்து வா என்ற பாவேந்தர் பாரதிதாசனின் பாட்டு வரிகள்

திராவிட வெற்றிக் கழகத் தோழர்களே நாம் யார் என்பதை நிரூபிக்கும் வேலை சுமைகள் இருக்கலாம் ஆனாலும் சோர்ந்து போகாமல் கடமையாற்ற அருமையான சந்தர்ப்பம் வாய்த்து இருக்கிறது

இது போல் ஒரு துவக்கம் எப்போதும் இருந்து இருக்காது வாழ்வின் உன்னதமான மணித்துளிகளை கடக்க இருக்கின்றோம்

26/09/2026 சனிக்கிழமை மதுராந்தகம் தேரடித் திடலில் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரிக்கும் பிரச்சார பொதுக்கூட்டத்தில் எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்க புலியெனச் செயல் செய்யப் புறப்பட்டு வாரீர்!

இவ்வாறு மல்லை ஏ.சத்யா தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்

# தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு பல்வேறு இயக்கங்கள், சங்கங்கள் ஆதரவு!

சென்னை, செப். 26–

நடைபெறவிருக்கும் மதுராந்தகம், தாராபுரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, அ.சு.பவுத்தன் அவர்களை நிறுவனத் தலைவராக கொண்ட ஆதித்தமிழர் சனநாயக பேரவை; ஜி.எஸ்.இக்பால் அவர்களை தலைவராக கொண்ட தமிழக புரட்சி கழகம்; ரெ.சௌந்தரராஜ் நாயுடு அவர்களை தலைவராக கொண்ட " தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கம் ஆகிய இயக்கங்கள், சங்கங்கள் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் முழு ஆதரவு அளிப்பதாகவும்; இத்தொகுதிகளில் அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு முழுமையாக பாடுபடுவதாக தெரிவித்துள்ளனர்.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகரத்தைச் சேர்ந்த மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் இராஜா. ரகுபதி, கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
*சென்னை 600 018.*
*நாள் : 24.09.2026.*

**துரைமுருகன்**
*பொதுச் செயலாளர்,*
*தி.மு.க.*

# ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்யா; முதலமைச்சர் விஜய் லண்டன் போகும்போது, தொழில்துறை அமைச்சர் கீர்த்தனாவுக்கு ஏதோ ஆபரேசனாமே! அதனால் தான் கூட போகலேன்னு செய்தி வந்திருக்கே பார்த்தியா!

**போண்டி :** ஆமாய்யா, பார்த்தேன். அமைச்சருக்குத் தான் ஆபரேசன்; சரி போகல. தொழில் துறை செயலாளர் போயிருக்கலாமே. சம்பந்தமே இல்லாத விளையாட்டுத் துறை அமைச்சர், தன் செயலாளரோடு போறார். அது சரி, அவங்க முதலீடு ஈர்க்கவா போனாங்க. வேற எதுக்கோ தானே போனாங்க விடுய்யா.

## சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

# செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

## (23.09.2026)



ஈரோடு மாவட்டம் - பெருந்துறை அருகே பணம் கொடுக்கல் வாங்கல் தகராறில் மெக்கானிக் வீட்டின் மீது பெட்ரோல் குண்டு வீச்சு



கடலூரில் 3 வயது சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல்; உடலில் காயங்களுடன் மயங்கிய நிலையில் சிறுமி மீட்கப்பட்டு கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதி

சென்னை அசோக் நகரில் சாலையில் உறங்கிய 65 வயது மூதாட்டிக்கு பாலியல் தொல்லை தந்த த.வெ.க. நிர்வாகி ஆனந்த் (29) என்பவர் கைது.



மதுரையில் குடிபோதையில் பணம் கேட்டு தொல்லை கொடுத்த அண்ணனை கத்தியால் குத்தி கொலை செய்த சகோதரர்; கடந்த நான்கு நாட்களில் மட்டும் மதுரையில் 4 படுகொலைச் சம்பவங்கள் அரங்கேறியுள்ளதால் மக்கள் அச்சம்



தூத்துக்குடி எட்டயபுரத்தில் கல்லூரி மாணவியை பின்தொடர்ந்து தொல்லை அளித்த த.வெ.க. நிர்வாகியின் சகோதரர்; தட்டிக் கேட்ட பெண்ணின் குடும்பத்தினர் மீது அரிவாள் காட்டி த.வெ.க. நிர்வாகி மிரட்டியதால் பதற்றம்


சேலம் : சேலம் புதிய பேருந்து நிலையத்தில் கடை வைத்திருக்கும் சிறு வியாபாரிகளிடம் த.வெ.க. நிர்வாகிகள் தினந்தோறும் கடை கடையாக சென்று மாமூல் வசூல் வேட்டை நடத்தி வியாபாரிகளுக்கு மிரட்டல். தலா ரூ.100 முதல் ரூ.200 வரை தினந்தோறும் வசூல் செய்து வருவதாகவும் த.வெ.க.வினரின் மாமூல் வசூல்வேட்டை குறித்து போலீஸில் புகார் அளித்தாலும் நடவடிக்கை எடுப்பதில்லை என குற்றச்சாட்டு.



கோயம்புத்தூர் மாவட்டம் குனிய முத்தூரில் 2 சவரன் நகைக்காக மூதாட்டி கொலை

ராமேஸ்வரம் : ராமேசுவரம் நகராட்சி 10 ஆவது வார்டு த.வெ.க. செயலாளராக பணியாற்றி வந்த பரந்தாமனின் வார்டு செயலாளர் பதவியை ராமநாதபுரம் கிழக்கு மாவட்ட செயலாளர் மலர்விழி ஜெயபாலா பறித்ததால் பரந்தாமன் வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

திருவண்ணாமலை : திருவண்ணாமலை தெற்கு மாவட்ட த.வெ.க செயலாளர் பாரதிதாசன் ஆட்டோ ஓட்டும் பெண்களை அவதூறு பேசி வருவதாக பெண்கள் குற்றச்சாட்டு. பெண் ஆட்டோ ஓட்டுநர்களை அவதூறாக பேசி மிரட்டல் விடுக்கும் த.வெ.க நிர்வாகி பாரதிதாசன் மீது புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என பெண்கள் வேதனை.



தென்காசி மாவட்டம் புளியங்குடியில் பட்டப்பகலில் அரசுப் பள்ளி ஆசிரியை யின் வீட்டின் பூட்டை உடைத்து 20 லட்சம் மதிப்பிலான நகை கொள்ளை; மர்ம நபர்களுக்கு போலீசார் வலைவீச்சு.

சேலம் - ஆத்தூர் : சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே ஆனைக்கல் மேடு பகுதியைச் சேர்ந்தவர் ஆறுமுகம் அவரது மனைவி முத்தம்மாள் (60) இவர்களுக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். வீட்டில் இரவு தூங்கிக் கொண்டிருந்த முத்தம்மாள் மீது ஆசிட் ஊற்றப்பட்டுள்ளது. இதில் காயம் அடைந்த முத்தம்மாள் அலறவே உடனடியாக அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் முத்தம்மாளை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விழுப்புரம் : ரயில்மூலம் விற்பனைக்காக விழுப்புரத்திற்கு கஞ்சா கடத்தி வந்த இருவரை விழுப்புரம் மதுவிலக்குப் போலீசார் கைது செய்து 5 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.



சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே பூட்டிய வீட்டை உடைத்து 7,28,500 பணம், 21 கிலோ பித்தளை விளக்கு கொள்ளை

மணப்பாறை : மணப்பாறை நகராட்சியில் துப்புரவு அலுவலராகப் பணியாற்றி வரும் டி. முத்துகணேஷ், மணப் பாறை காவல் நிலைய சட்டம்-ஒழுங்கு காவல் ஆய்வாளரிடம் புகார் மனு அளித்துள்ளார். அதில் த.வெ.க. சட்டமன்ற உறுப்பினரின் உறவினரும் மணப்பாறை நகர மன்ற த.வெ.க. உறுப்பினரும் சேர்ந்து தன்னை மிரட்டியதாக புகார் அளித்துள்ளார்.